பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 07 2024 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. கூட்டாட்சி தத்துவத்திற்கு இலக்கணமாக மத்திய பட்ஜெட் உள்ளது என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. மத்தியப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக திருமதி **Preeti Sudan** நியமிக்கப்பட்டுள்ளார்

4. இந்தியாவுடனான வர்த்தகத்தை அதிகரிக்க விரும்புவதாக வியட்நாம் தெரிவித்துள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் மகளிர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Lovlina Borgohain** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று மாநிலங்களவையில் இதனை தெரிவித்த உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த் ராய், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இப்பணியில் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மீட்பு பணிகளுக்காக கேரளாவிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து வருவதாகவும் திரு. நித்யானந்த் ராய் கூறினார்.

இதற்கிடையே, கேரள அமைச்சரவை அம்மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் தலைமையில் இன்று திருவனந்தபுரத்தில் கூடி, வயநாடு நிலச்சரிவு குறித்து விவாதித்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. பினராயி விஜயன், நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கென வயநாடு மாவட்டத்தில் 82 நிவாரண முகாம்கள் செயல்பாட்டில் உள்ளதாக தெரிவித்தார்.

இதில், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

**Meppadi-**யில் மட்டும் எட்டு முகாம்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**Mundakki, Attamala** மற்றும் **Chooralmela**-வில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மீட்புப் பணியில் கூடுதல் ராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிலச்சரிவில் உயிரிழந்தவர்களுக்கான பிரேத பரிசோதனை கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றதாக அவர் கூறினார்.

இதற்காக கோழிக்கோடு மற்றும் தலசேரி பகுதிகளிலிருந்து கூடுதல் மருத்துவர்கள் வயநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. பினராயி விஜயன் தெரிவித்தார்.

இந்நிலையில், தமிழக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டிருந்த 5 கோடி நிவாரண நிதிக்கான காசோலையை மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு, திரு. பினராயி விஜயனிடம் இன்று வழங்கினார்.

**>>>><<<<**

கூட்டாட்சி தத்துவத்திற்கு இலக்கணமாக மத்திய பட்ஜெட் உள்ளது என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் எவ்வித பாரபட்சமும் இன்றி மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை அவர் நிராகரித்தார். கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக ஒரு லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>><<<<**

தேசிய நெடுஞ்சாலை பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில், புறவழிச்சாலைகள், உயர்மட்ட சாலைகள், மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் மற்றும் நடை மேம்பாலங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

**>>>><<<<**

5-ஜி அலைக்கற்றை ஏலத்தின் மூலம் கடந்த நிதியாண்டில் அரசுக்கு 11 ஆயிரத்து 340 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், ஏழு சுற்றுகளாக இந்த ஏலம் நடைபெற்றதாக கூறினார்.

>>>><<<<

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், மருத்துவ படிப்பு இடங்களுக்கான எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தேசிய தேர்வு முகமை இதுவரை 250 தேர்வுகளை நடத்தியுள்ளதாகவும் கூறினார்.

இதில், 5 கோடிக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

>>>><<<<

நாடுமுழுவதும் 7 ஆயிரத்து 300 மெகாவாட் மின்உற்பத்தி திறன் கொண்ட 9 அணுஉலைகள் அமைக்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், புதிதாக 12 அணுஉலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அணுமின் நிலைய பாதுகாப்பில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>><<<<

பிரமரின் மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாக மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மீன்பிடி படகுகளை மேம்படுத்தவும், புதிய படகுகள் மற்றும் வலைகளை வாங்குவதற்கென இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக தெரிவித்தார். மீன்வளத்தை பெருக்கும் நோக்கில் மழைக்காலத்தில் மீன்பிடி தடைக்காலம் கடைபிடிக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

மூத்த குடிமக்களின் நலனுக்கான மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக சமூகநீதித்துறை இணையமைச்சர் திரு. பி.எல். வர்மா கூறியுள்ளார். மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மூத்த குடிமக்களின் பாதுகாப்பிற்கென சட்டம் ஒன்று இயற்றப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளுக்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். முதியோர்களுக்கு சிறப்பு மருத்துவ சேவை வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயல்பாட்டில் உள்ளதாகவும் திரு. பி.எல். வர்மா குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

இந்தியாவுடனான வர்த்தகம், மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று வியட்நாம் பிரதமர் திரு. **Pham Minh Chinh** கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள அவர், இன்று இந்திய வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார். இருநாடுகளுக்கு இடையேயான உறவு பாரம்பரியமிக்கது என்றும் அவர் தெரிவித்தார். கலாச்சார ரீதியாகவும் இருநாடுகளும் வலுவான நட்புறவை கொண்டிருப்பதாகவும் வியட்நாம் பிரதமர் கூறினார்.

**>>>><<<<**

மகாராஷ்ட்ர மாநில ஆளுநராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி **Devendra Kumar Upadhyaya** அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதேபோல், ராஜஸ்தான் மாநில ஆளுநராக திரு. **Haribhau Kisan Rao Bagde** இன்று பதவியேற்றுக் கொண்டார். ஜெய்ப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில தலைமை நீதிபதி மனீந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். தெலங்கானா ஆளுநராக திரு. **Jishnu Dev Varma**-வும் பதவியேற்றுக் கொண்டார்.

**>>>><<<<**

தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. **Jitin Prasada** கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், நாடுமுழுவதும் 65 மென்பொருள் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இந்த துறையில் 100 சதவீத நேரடி அந்நிய நேரடி முதலீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாடுமுழுவதும் கிராமப்புற பகுதிகளுக்கு இணையதள சேவை வழங்குவதற்கான திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. **Jitin Prasada** கூறினார்.

**>>>><<<<**

கர்நாடக துணை முதலமைச்சர் திரு. **D.K.**சிவகுமார், இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின் போது கர்நாடகாவின் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து விவாதித்ததாக திரு. டி.கே. சிவக்குமார் தெரிவித்தார்.

**>>>><<<<**

பிஜு ஜனதா தள் கட்சியிலிருந்து விலகுவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. **Mamata Mohanta** கூறியுள்ளார். இதுதொடர்பாக கட்சித் தலைவர் திரு. நவீன் பட்நாயக்-கிற்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். பொதுநலனை கருத்தில் கொண்டு இந்த முடிவினை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மாநில உறுப்பினர் பதவியையும் திருமதி. **Mamata Mohanta** ராஜினாமா செய்துள்ளார்.

**>>>><<<<**

மத்தியப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக திருமதி **Preeti Sudan** நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியை வகித்து வந்த டாக்டர் **Manoj Soni-**யின் ராஜினமாவை அடுத்து, இவர் இப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

**>>>><<<<**

பாரிஸ் ஒலிம்பிக் மகளிர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Lovlina Borgohain** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். 75 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் நார்வேயின் **Sunniva Hofstad-**ஐ வென்றார். துப்பாக்கிச் சுடும் போட்டியில் **Swapnil Kusale** இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் இறுதிச்சுற்றுக்கான தகுதிச்சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் அவர், 21-18, 21-12 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Jonathan Christie-**யை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் பி.வி. சிந்து-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் அவர், 21-5, 21-10 என்ற செட்கணக்கில் எஸ்டோனியாவின் **Kristin Kuuba-**வை வென்றார்.

டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்ரீஜா அகுலா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இன்று நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், சிங்கப்பூரின் **Jian Zeng-**ஐ வென்றார். வில்வித்தைப் போட்டியின் மகளிர் பிரிவில் தீபிகா குமாரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார். ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், நெதர்லாந்தின் **Quinty Roeffen**-ஐ வென்றார்.

**>>>>END<<<<**